பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 10 2017** புதன்கிழமை **06 45** காலை

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. உடனடியாக நிவாரணம் அளிக்கக் கூடிய மருந்துகளை கண்டுபிடிப்பதில் ஆயுர்வேத மருத்துவ நிபுணர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தீபாவளி பண்டிகையை மக்கள் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடி வருகிறார்கள்.

3. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மக்கள் சிரமமில்லாமல் பயணம் செய்யும் அளவிற்கு கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எம் ஆர் விஜயபாஸ்கர் கூறியிருக்கிறார்.

4. வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக இருப்பதாக வருவாய்த் துறை அமைச்சர் திரு ஆர் பி உதயகுமார் தெரிவித்திருக்கிறார்.

5. ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் சூப்பர் நான்கு ஸ்டேஜ் முதல் போட்டியில் இன்று இந்தியா - தென்கொரியாவை சந்திக்கிறது.

-- இனி விரிவான செய்திகள்

<<<><><><>>>

நோயாளிகளுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கக் கூடிய மருந்துகளை கண்டுபிடிப்பதில் ஆயுர்வேத மருத்துவ நிபுணர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஆயுர்வேத தின விழாவையொட்டி முதலாவது அகில இந்திய ஆயுர்வேத மருத்துவ விஞ்ஞான கழகத்தை தொடங்கி வைத்து பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

ஆயுர்வேத மருத்துவத்தை வலுப்படுத்த தனியார் நிறுவனங்கள் தங்களது சமூக பொறுப்பு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சுகாதாரத் துறையில் 100 சதவீத நேரடி அன்னிய முதலீட்டை அரசு அனுமதிக்கிறது என்று குறிப்பிட்ட பிரதமர், யோகா, ஆயுர்வேதா உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளை மேம்படுத்த முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும் என்றார்.

தடுப்பு மருந்து சிகிச்சை என்பது அனைவருக்கும் ஏற்றதாகவும், எளிதாக கிடைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்றும், அரசின் நோக்கமும் இதுதான் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<><><><>>>

தலைமறைவாக உள்ள ஆயுத தரகர் பண்டாரிக்கும், காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தியின் மருமகன் திரு ராபர்ட் வதேராவுக்கும் உள்ள தொடர்பு குறித்து காங்கிரஸ் தலைமை மவுனம் சாதிப்பது ஏன் என்று பிஜேபி வினவியுள்ளது.

நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், லண்டனில் உள்ள பண்டாரியின் இல்லத்தில் அவரை திரு வதேரா சந்தித்து பேசியிருப்பதாக குற்றம்சாட்டினார்.

திரு வதேராவுக்கு விமான டிக்கெட்டுகளை பண்டாரி வாங்கிக் கொடுத்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வந்த பிறகும், காங்கிரஸ் தலைமை அமைதியாக இருப்பது வியப்பளிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விஷயத்தில் காங்கிரஸ் துணைத்தலைவர் திரு ராகுல் காந்தி விளக்கமளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<><><><>>>

ஆயுத தரகர் பண்டாரி - ராபர்ட் வதேராவுக்கு உள்ள தொடர்பில் தவறு ஏதாவது நடந்திருந்தால் அதுகுறித்து விசாரணைக்கு பிரதமர் உத்தரவிடலாம் என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

பெங்களூருவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு ரந்தீப் சுர்ஜிவாலா கடந்த 41 மாதங்களாக வதேராவை ஏதாவது ஒரு வழக்கில் சிக்க வைக்க சதி நடப்பதாக குற்றம் சாட்டினார்.

<<<><><><>>>

தீப திருநாளாம் தீபாவளி பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

இதனால் மாநிலம் முழுவதும் மக்களிடையே பண்டிகைக்கான உற்சாகம் காணப்படுகிறது.

காலையிலேயே எழுந்து எண்ணெய் தேய்த்து, குளித்து, புத்தாடைகளை அணிந்து, பட்டாசுகளை வெடித்தும், மத்தாப்புகளை கொளுத்தியும், வழக்கமான உற்சாகத்துடன் இந்நாளை மக்கள் கொண்டாடி வருகிறார்கள்.

அண்டை வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இனிப்புகளை வழங்கி வாழ்த்துக்களை பறிமாறிக் கொண்டனர்.

கோவில்களுக்கும் சென்று வழிபட்டனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திரையரங்குகளில் இன்று முன்னணி நடிகர்களின் புதிய திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

இதனால், திரையரங்குகளில் ரசிகர்களின் கூட்டத்தை காண முடிகிறது.

<<<><><><>>>

தீபாவளி பண்டிகை இன்று கொண்டாடப்படுவதையொட்டி மக்களுக்கு தலைவர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழக ஆளுநர் திரு பன்வாரிலால் புரோஹித், முதலமைச்சர் திரு எடப்பாடி பழனிசாமி, மத்திய இணையமைச்சர் திரு பொன் ராதாகிருஷ்ணன், பிஜேபி மாநில தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு திருநாவுக்கரசர், தே மு தி க நிறுவனர் திரு விஜயகாந்த், பாமக நிறுவனர் மருத்துவ ச ராமதாசு, த மா கா தலைவர் திரு ஜி கே வாசன் உள்ளிட்ட தலைவர்கள் தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

<<<><><><>>>

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொதுமக்கள் சிரமமில்லாமல் வெளியூர் செல்ல தேவையான அளவு பேருந்துகள் இயக்கப்பட்டதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எம் ஆர் விஜயபாஸ்கர் கூறியிருக்கிறார்.

சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்ட கோயம்பேடு, பூந்தமல்லி, அண்ணா நகர் உள்ளிட்ட இடங்களில் நள்ளிரவு வரை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 13–ஆம் தேதி முதல் மாநிலம் முழுவதும் ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 498 பேர் முன்பதிவு செய்து பயணம் செய்தனர் என்றார்.

சென்னையிலிருந்து கடந்த மூன்று நாட்களில் 5 லட்சத்து 15 ஆயிரம் பயணிகள் தங்களது சொந்த ஊருக்கு சென்றனர் என்றும், முன்பதிவு செய்யாத பயணிகள் அதிக அளவில் இருந்ததால், கூடுதலாக பேருந்துகள் இயக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக அமைச்சர் ஆம்னி பேருந்து நிலையங்களில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா என பயணிகளிடம் நேரில் கேட்டறிந்தார்.

<<<><><><>>>

தமிழகத்தில் இன்றும் நாளையும் பரவலாக மழை பெய்யக் கூடும் என்ற வானிலை அறிவிப்பினை கருத்தில் கொண்டு புகை எழுப்பும் பட்டாசுகளை பெருமளவில் தவிர்க்குமாறு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஈரப்பதமான வானிலை காரணமாக புகை மேலெழும்பி செல்வது தடுக்கப்பட்டு தரைப்பகுதியிலேயே அதிக அழுத்தத்தை உண்டாக்கி காற்றை மாசுப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டாசுகளில் உள்ள கந்தக ஆக்ஸைடு உள்ளிட்ட வேதிப் பொருட்கள் காற்றில் கலந்து மூச்சு திணறல், நுரையீரல் பிரச்சினை உள்ளிட்ட உடல் நல பாதிப்புகள் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் ஒலியும் மேலே செல்லாமல் பக்கவாட்டிலேயே எதிரொலிப்பதால் ஒலி மாசு அதிக அளவில் ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<><><><>>>

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மாநில அரசு தயாராக இருப்பதாக வருவாய் துறை அமைச்சர் திரு ஆர் பி உதயகுமார் கூறியிருக்கிறார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுகுறித்து ஏற்கனவே அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கும் உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

மழையால் பாதிப்புக்குள்ளாக கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு மாவட்டந்தோறும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<><><><>>>

டி டி வி தினகரன் ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் திமுக ஆட்சி அமைக்க முடியாது என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு எஸ் பி வேலுமணி கூறியிருக்கிறார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எப்படியாவது தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆக வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் திமுக செயல்தலைவர் திரு மு க ஸ்டாலின் செயல்பட்டு வருவதாக கூறினார்.

ஆனால், அவரது எண்ணம் நிறைவேறாது என்றும் அவர் கூறினார்.

கோவை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் எவரும் உயிரிழக்கவில்லை என்றும், மருத்துவமனையில் 35 பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<><><><>>>

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் உத்தரவின் பேரில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் நேற்று திடீர் சோதனை நடத்தப்பட்டது.

சென்னை மாவட்ட வன அலுவலர் மண்டல அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத மூன்று லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மற்றும் 113 கிராம் மதிப்புள்ள தங்க ஆரம் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

உதகமண்டலம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத 73 ஆயிரத்து 200 ரூபாயும், விழுப்புரம் மாவட்டம் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் காட்டப்படாத 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் கைப்பற்றப்பட்டதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<><><><>>>

நீலகிரி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மயில்வாகனன் - 36 செகண்ட்ஸ்)

<<<><><><>>>

<u>இருவரி செய்திகள்</u>

ஆப்கானிஸ்தானில் நேற்று இரண்டு இடங்களில் தீவிரவாதிகளின் தற்கொலைப் படை நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள் உட்பட 71 பேர் உயிரிழந்தனர்.

<<<><><><>>>

இந்தியா தொடர்பான அமெரிக்க கொள்கை குறித்து இன்று வாஷிங்டனில் நடைபெற உள்ள சிந்தனையாளர்கள் கூட்டத்தில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ரெக்ஸ் டில்லர்சன் உரையாற்ற உள்ளார்.

<<<><><><>>>

தில்லியில் உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறி பட்டாசுகளை வைத்திருந்ததாக 29 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து ஆயிரத்து 200 கிலோ பட்டாசுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<><><><>>>

பட்டாசு விற்பனைக்கும் வெடிக்கவும் தடை விதித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்கு வெளியே நேற்று பட்டாசு வெடித்த 14 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<><><><>>>

தெலுங்கானா மாநிலத்தில் பன்றிக் காய்ச்சலுக்கு 2 பேர் உயிரிழந்தனர்.

<<<><><><>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் கொசஸ்தலையாறு மற்றும் குளம் குட்டைகளில் நீர்வரத்து அதிகமாக உள்ளதால், நீர் நிலைகளுக்கு அருகில் சிறுவர்களை விளையாட அனுமதிக்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி சுந்தரவல்லி பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<><><><>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

டாக்காவில் நடைபெற்று வரும் ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியின் சூப்பர் நான்கு ஸ்டேஜ் ஆட்டத்தில் இன்று இந்தியா - தென்கொரியாவை சந்திக்கிறது.

இந்தப் போட்டி மாலை ஆறு மணிக்கு தொடங்கும்.

குரூப் சுற்றில் தான் விளையாடிய மூன்று ஆட்டங்களிலும், வெற்றிபெற்ற இந்திய அணி இன்றைய ஆட்டத்தில் தென்கொரியாவை வீழ்த்தி தனது வலிமையை நிலைநாட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, பிற்பகல் மூன்று முப்பது மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பாகிஸ்தான் - மலேசியா அணிகள் மோதுகின்றன.

<<<><><><>>>

17 வயதிற்குட்பட்டோருக்கான உலக கோப்பை கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் ஸ்பெயின், இங்கிலாந்து, ஈரான், மாலி அணிகள் வெற்றிபெற்றன.

<<<><><><>>>

தமிழ்நாடு - திரிபுரா இடையிலான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் டிராவில் முடிவடைந்தது.

<<<><><><>>>